# டிசம்பர் – 05 – புதன்

**புனித சபாஸ்**

**ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. திபா. 23:1**

---------------------------------------------------------------------

## முதல் வாசகம் : ஏசாயா 25 : 6 - 10

படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார் அதில் சுவைமிக்க பண்டங்களும், பழரசப் பானமும், கொழுப்பான இறைச்சித் துண்டுகளும், வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசமும் பரிமாறப்படும். மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை இந்த மலையில் அவர் அகற்றிவிடுவார் பிற இனத்தார் அனைவரின் துன்பத் திகிலைத் தூக்கி எறிவார். என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார் என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார் தம்மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார் ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார். அந்நாளில் அவர்கள் சொல்வார்கள் இவரே நம் கடவுள் இவருக்கென்றே நாம் காத்திருந்தோம் இவர் நம்மை விடுவிப்பார் இவரே ஆண்டவர் இவருக்காகவே நாம் காத்திருந்தோம் இவர் தரும் மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம்.” ஆண்டவரின் ஆற்றல் இம்மலையில் தங்கியிருக்கும் எருக்குழி நீரில் வைக்கோல் மிதிக்கப்படுவதுபோல், மோவாபு அவரால் மிதிக்கப்படுவான்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் இல்லத்தில் நான் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்

## நற்செய்தி : மத்தேயு 15 : 29 - 37

அக்காலத்தில் இயேசு கலிலேயக் கடற்கரை வழியாகச் சென்று அங்கே ஒரு மலையின் மீது ஏறி அமர்ந்தார். அப்பொழுது பெருந்திரளான மக்கள் அவரிடம் வந்தனர். அவர்கள் தங்களோடு கால் ஊனமுற்றோர், பார்வையற்றோர், உடல் ஊனமுற்றோர், பேச்சற்றோர், மற்றும் பிற நோயாளர் பலரையும் அவர் காலடியில் கொண்டுவந்து சேர்த்தனர். அவர்களை அவர் குணமாக்கினார். பேச்சற்றோர் பேசுவதையும் உடல் ஊனமுற்றோர் நலமடை வதையும் பார்வையற்றோர் பார்க்கிறதையும் கண்டு மக்கள் கூட்டத்தினர் வியந்து இஸ்ரயேலின் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். இயேசு தம் சீடரை வரவழைத்து, ”நான் இம்மக்கள் கூட்டத்தின்மீது பரிவுகொள்கிறேன். ஏற்கெனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் எதுவும் இல்லை. இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிடவும் நான் விரும்பவில்லை. அனுப்பினால் வழியில் தளர்ச்சி அடைந்து விடலாம்” என்றுகூறினார். அதற்குச் சீடர்கள் அவரிடம், ”இவ்வளவு திரளான மக்களுக்கு அளிக்கப் போதுமான உணவு நமக்குப் பாலைநிலத்தில் எங்கிருந்து கிடைக்கும்?” என்றுகேட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, ”உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?” என்றுகேட்டார். அவர்கள், ”ஏழு அப்பங்கள் உள்ளன் சில மீன்களும் இருக்கின்றன” என்றார்கள். தரையில் அமருமாறு மக்களுக்கு அவர் கட்டளையிட்டார். பின்பு அந்த ஏழு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்குக் கொடுத்தார்கள். அனைவரும் வயிறார உண்டனர். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழுகூடைகள் நிறைய எடுத்தனர்.

**தியானம்:** மத்தேயு நற்செய்தியில் அப்பத்தை பகிர்ந்தளித்த நிகழ்வு இருமுறை வருகிறது. இன்றைய நற்செய்தி மற்றும் (மத்14:13-21) ஏறத்தாழ ஒரே மாதிரியுள்ள நிகழ்வை மத்தேயு இரண்டு முறை கொடுக்க காரணம் என்ன ? அவற்றின் பிண்ணனியைப் பார்த்ததோம் என்றால் அவற்றின் முக்கியத்துவம் நமக்கு தெரிய வரும். (மத். 14:13-21) வரும் புறவினத்தார் பகுதியில் செய்யப்பட்ட புதுமையாகவும் (மத் 14:13) (பாலைநிலத்திலுள்ள தனிமையான இடம் இன்றைய நற்செய்தியில் வரும் நிகழ்வு யூத நிலப்பகுதியிலுள்ள (மத்.15:29) கலிலேயாக் கடற்கரை) செய்யப்பட்ட புதுமையாகவும் இருக்கிறது. விவிலியத்தின் பின்னனியில் உணவு அல்லது விருந்து என்பது இறைவன் தருகின்ற முழுமையான வாழ்வை சுட்டிக்காட்டுகிறது. இயேசு நிறைவான வாழ்வை யூதர்களுக்கு மட்டுமல்ல யூதரல்லாத எல்லோருக்குமே கொண்டு வந்தார். என்ற செய்தியையே மத்தேயு இந்த இரண்டு புதுமைகள் வழியாக நமக்கு எடுத்துரைக்கிறார். திருவருகைக்காலத்தில் இயேசுவின் வருகைக்காக காத்திருக்கின்றோம். இயேசுவின் வருகை நிறைவான வாழ்வையும் முழுமையான மகிழ்ச்சியையும் கொண்டு வரும், வருகை மனிதர்களாகிய நாம் நம்மிடம் இருக்கின்ற குறைவானவற்றை ( ஏழு அப்பங்கள் மற்றும் சில மீன்கள்)மனமுவந்து கொடுக்கும்போது நாம்தேடுகின்ற நிறைவானவற்றை (வயிறார உண்டனர் என்பது வர்ணிக்க முடியாத நிறைவைச் சுட்டிக்காண்பிக்கிறது) தரவல்லவர். எனவே இன்றைய தருப்பலில் நம்வாழ்வின் நிறைவை இயேசு மட்டுமே தர முடியும் என்பதை நம்புகின்றோமா? என்பதை தியானிப்போம்